**செய்தி வெளியீடு எண்: 365** **நாள்: 05.06.2018**

தமிழ்நாடு பொன்விழா ஆண்டினை முன்னிட்டு, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் "இளந்தமிழ் ஆய்வாளர் விருது" அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விருதிற்குத் தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த முனைவர்ப்பட்டம் பெற்ற 50 ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.15,000/-மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட உள்ளன. தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு முதலியவற்றில் முனைவர்ப்பட்டம் பெற்ற, 45 வயதிற்குட்பட்ட ஆராய்ச்சியாளர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாகச் செயல்படுத்தப்படவுள்ள இவ்விருதுக்கான விண்ணப்பம் மற்றும் தகுதிக்குறிப்புகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் www.tamiluniversity.ac.in என்ற இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் 30.06.2018ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் மாண்பமை துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010 என்ற முகவரிக்கு வந்து சேர வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**